**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.172** **நாள் : 30.12.2016**

**வர்தா புயலுக்குப் பின் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மரக்கன்றுகள் நடுவதற்கான ஆயத்தங்கள் பற்றிய கருத்துதிர்ப்புக் கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை சார்பில், ரிப்பன் மாளிகையில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வர்தா புயலுக்குப் பின் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மரக்கன்றுகள் நடுவதற்கான ஆயத்தங்கள் பற்றிய கருத்துதிர்ப்புக் கூட்டம் இன்று (30.12.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தலைமை வனப் பாதுகாவலர் திரு. ஏ.வி. வெங்கடாச்சலம், இ.வ.ப., அவர்கள், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை சார்பில் முனைவர். கலையரசன், முனைவர்.விஸ்வநாதன், திரு. சந்தோஷ் குமார், பூமிகா அறக்கட்டளை சார்பில் ரிங்கு மெச்சரி, லதா சுப்பிரமணியம், டைம்ஸ் இந்தியா – டவர் லைன்ஸ் பிரைவேட் லிட் நிறுவனம் சார்பில் ரவி, நிழல்கள் அறக்கட்டளை சார்பில் ஷோபா மேனன், முனைவர். பாபு, கேர் எர்த் அறக்கட்டளை சார்பில் ஜெயஸ்ரீ வெங்கடேசன், அண்ணா பல்கலைக்கழகம் சார்பில் பேராசிரியர் முனைவர். வாசுதேவன், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார மையம் சார்பில் முனைவர். உமாசங்கர், சி.பி. இராமசாமி ஐயர் பவுண்டேசன் சார்பில் முனைவர். சுதாகர், சென்னை கிறித்தவக் கல்லூரி சார்பில் முனைவர். நரசிம்மன், மகளிர் கிறித்தவ கல்லூரி சார்பில் முனைவர். பாலின் டெபோரா, சென்னை மாவட்ட வன அலுவலர் கே.அசோகன், சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் முனைவர்.மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை சார்பில், வர்தா புயலால் சென்னையில் பாதிக்கப்பட்ட மரங்கள் பற்றிய விளக்கக் காட்சி காண்பிக்கப்பட்டு, வல்லுநர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கேட்கப்பட்டது.

டைம்ஸ் இந்தியா மற்றும் நிழல் அறக்கட்டளை சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிக்குட்பட்ட மண்டலம்–13, வார்டு–176ல் மரங்கள் பற்றிய முழு அளவிலான தகவல்கள் ஜி.ஐ.எஸ். முறையில் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதைப்போல் மாநகரம் முழுவதும் உள்ள அனைத்து வார்டுகளிலும் இத்தகைய தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும்

என்றும் தெரிவித்தார்கள். பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மரங்கள் பற்றிய முழு தகவல்கள் சேகரிக்கப்பட்டு மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என தெரிவித்தார்கள்.

மேலும், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட பல்வேறு அமைப்பினைச் சார்ந்த வல்லுநர்கள் கீழ்க்கண்ட கருத்துக்களை தெரிவித்தார்கள்.

- ❖ சரியான இடங்களில் சரியான மர வகைகள் நடப்படாததால், மரங்கள் புயலால் பாதிக்கப்பட்டன.
- ❖ மரங்களின் வேர் அமைப்புகள் சரியில்லாததாலும், மரத்தின் தண்டுப்பகுதி பாதிக்கப்பட்டதாலும், மண் ஸ்திரத்தன்மையில்லாததாலும் மற்றும் சமநிலையற்ற வளர்ச்சியினாலும் பெரும்பாலான மரங்கள் பாதிக்கப்பட்டன.
- ❖ மரம் நடுதல், வளர்த்தல் மற்றும் பராமரித்தலில் பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோரின் பங்களிப்பினை ஊக்குவிக்கவேண்டும்.
- ❖ மரங்கள் நடுவதில் அறிவியல் பூர்வமான அணுகுமுறை இருக்க வேண்டும்.
- ❖ உள்நாட்டு மரவகைகள் பெருமளவில் நடப்படவேண்டும்.
- ❖ வெளிநாட்டு மர வகைகளை முற்றிலுமாக தவிர்க்காமல் அவற்றின் எண்ணிக்கை அளவுகளை குறைத்து நடலாம்.
- ❖ பசுமை மண்டலங்கள் மற்றும் இயற்கையான தாங்கல் பசுமைப் பகுதிகள் அதிக அளவில் உருவாக்க வேண்டும்.
- ❖ மரங்கள் முறையற்ற வகையில் நடப்படுவதை தடுத்து, முறையான வகையில் நடப்பட வேண்டும்.
- ❖ கடற்கரைப் பகுதிகள், குடியிருப்பு பகுதிகளில், நிறுவனங்கள் மற்றும் நீர்நிலைகள் அமைந்துள்ள பகுதிகளில், அப்பகுதிகளுக்கு ஏற்ற மரங்களை கண்டறிந்து நடப்பட வேண்டும்.
- ❖ மரம் நடுதல், பராமரித்தல் போன்ற பணிகளை பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ள சரியான ஒருங்கிணைப்பு அமைப்பினை உருவாக்க வேண்டும்.
- ❖ மரக்கன்றுகள் எங்கெங்கு கிடைக்கும் என்ற தகவல்களை அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும். மரக்கன்றுகளை சரியான பருவ காலத்தில் நட வேண்டும்.
- ❖ சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் மரங்கள் பெரும் பங்காற்றுவதால், சூழலுக்கு ஏற்ற மரங்கள் நடப்பட வேண்டும்.

- சாலைகளின் மத்திய தடுப்புச்சுவர்களில் மரங்கள் நடுவதை தவிர்க்க வேண்டும்.
- புயல் வீசும்போது, மரங்கள் காற்றின் வேகத்தை குறைத்து காற்றுத் தடைகளாக செயல்பட்டு பல்வேறு பாதிப்புகளை குறைக்க பயன்படுவதால், சரியான மர வகைகளை கண்டறிந்து நட வேண்டும்.
- கல்லூரி மாணவர்களை மரம் நடுதல், வளர்த்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய தொண்டுப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.
- வல்லுநர்கள் அடங்கிய குழுக்களை உருவாக்கி மரங்களை பராமரிக்க வேண்டும்.
- வர்தா புயலுக்குப் பின்பு, பல்வேறு இடங்களில் விழுந்த மரங்கள் பற்றிய விவரங்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தால் சேகரிக்கப்பட்டுள்ளன. அந்த தகவல்கள் மூலம் எதிர்வரும் காலங்களில் எத்தகைய மரங்கள் நடலாம், அவை எவ்வாறு பராமரிக்கப்பட வேண்டும் என்பது பற்றி அறிந்து கொள்ளலாம்.
- மரங்கள் நடுவதற்கான சரியான இடங்களை கண்டறிந்து பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து இந்தப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
- விழுப்புரம் மாவட்டத்தில் வனத்துறை சார்பில் அதிக அளவில் மரக்கன்றுகள் வளர்க்கப்படுவதாகவும், அவற்றை மாநகராட்சிப் பகுதிகளில் நடுவதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். நடுவதற்கு தேவையான மரக்கன்றுகளை வளர்ப்பதற்கு குறைந்தபட்சம் 6 மாதங்கள் ஆகும்.
- சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடும்போது குழிகள் குறைந்தபட்சமாக 4 x 4 அடி அளவில் வெட்டப்பட வேண்டும்.
- மரத்தின் வேர்கள் நிலத்திற்குள் படர்வதற்கு வாய்ப்புள்ள இடங்களில் மட்டுமே மரங்கள் நடப்பட வேண்டும்.
- அனைத்து இடங்களிலும் மரங்கள் நடுவதை தவிர்த்து, தேவையான இடங்களில் மட்டும் நடப்பட வேண்டும்.
- மரங்களை முறையாக வளர்த்து பராமரிப்பதற்கான திறமைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
- மரங்கள் வளர்ப்பது ஒரு கலை. சென்னை மாநகர பகுதி நதிகளின் டெல்டா பகுதியில் அமைந்துள்ளதாலும், இங்கு காற்றின் ஈரப்பதம் அதிகமாக உள்ளதாலும் மரங்கள் வளர்வதற்கான சூழ்நிலை இயற்கையாகவே அமைந்துள்ளது.

- மரங்கள் நட்டு பராமரிக்கும் பணிகளை ஸ்மார்ட் சிட்டியின் ஒரு அங்கமாக மேற்கொள்ள வேண்டும். தொலைநோக்கு அடிப்படையிலும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய குறைந்த கால அளவுகோல்களை நிர்ணயித்தும் இப்பணியினை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- எதிர்கால சந்ததியினர்களுக்கு மரங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக பள்ளிக் குழந்தைகளுக்கு மரங்கள் வளர்த்தல் பற்றிய முக்கியத்துவம் மற்றும் புரிதல்களை பயிற்றுவிக்க வேண்டும்.
- மேலும், ஒருங்கிணைந்த திட்டமிடல், திட்ட ஆவணங்கள் தயாரித்தல், திட்டக் குழு உருவாக்குதல் போன்றவற்றுடன் பூங்காத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

மரம் நடுதல், வளர்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் அறிவியல் பூர்வமாக மேற்கொள்ளப்படும் எனவும், இனிவரும் காலங்களில் இத்தகைய பணிகளுக்கு அதிக முன்னுரிமை தரப்படும் எனவும், சிறிய அளவிலான பணிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, குறுகியகால மற்றும் நீண்டகால இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்படும் எனவும், பூங்காத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு, தோட்டக்கலை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படும் எனவும், பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை சார்பில், பேருந்து சாலைகளில் உள்ள மரங்களின் அடிப்பகுதியில் மழைநீர் உட்செல்வதற்காக கிரேட்டிங் அமைப்புகள் பொருத்தப்பட்டுள்ளன எனவும், தன்னார்வலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் தங்களை பதிவு செய்துகொள்ள ஏற்கனவே வசதி செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களின் தொண்டுப் பணிகள் இனிவரும் காலங்களில் மேலும் சிறந்த வழியில் பயன்படுத்திக் கொள்ளப்படும் எனவும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர்கள், வட்டார துணை ஆணையாளர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**